★ **அ. விளக்கங்களுக்கேற்ற சரியான மரபுத்தொடர்களை இணைத்துக் கூறுக. எழுதுக.**

| | |
|---|---|
| பிடிவாதமாக இருத்தல் | தொன்றுதொட்டு |
| வெறும் கற்பனை | கரி பூசுதல் |
| ஆதிகாலத்திலிருந்து | கடுக்காய் கொடுத்தல் |
| உறுதி பூணுதல் | ஒற்றைக்காலில் நிற்றல் |
| அவமானம் ஏற்படுத்துதல் | கங்கணம் கட்டுதல் |
| ஏமாற்றித் தப்புதல் | மனக்கோட்டை |

★ **ஆ. வாக்கியங்களுக்குப் பொருந்தும் வகையில் கொடுக்கப்பட்ட மரபுதொடர்களைத் தெரிவு செய்து கூறுக. எழுதுக.**

1. கோபால் சிம்புவிடம் பணத்தை வாங்கிவிட்டுத் திருப்பித் தராமல் ________
2. ________ தமிழர்கள் இசைக்கலையில் நாட்டம் உடையவர்கள்.
3. சிறந்த வீரன் என்று மார்தட்டிக்கொண்ட சுந்தர், போட்டியில் தோல்வி கண்டு முகத்தில் ________
4. தானும் தன் தந்தையுடன் மலாக்கா வருவேன் என்று குமார் ________ நின்றான்.

★ **இ. சூழலுக்கேற்ப மரபுத்தொடர்களைத் தெரிவு செய்து கூறுக. எழுதுக.**

1. வாழ்க்கையில் நான் வெற்றி பெறுவேன் என்று சுமதி கடுமையாக உழைத்தாள். ________
2. சந்துரு பணத்தை எடுத்துவிட்டு அனைவரையும் சாமர்த்தியமாக ஏமாற்றினான். ________
3. வளர்மதி தன் தாயிடம் கெஞ்சி நாட்டியப் பள்ளியில் சேர்ந்தாள். ________
4. சுந்தரி படிக்காமல் சுற்றித் திரிந்துவிட்டு சிறப்புத் தேர்ச்சி பெறலாம் என நினைப்பது. ________

LIVEWORKSHEETS